Y-M.C.A


பக்கங்கள் நான்கு — விலை ரூபா/- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 105 பிரமோதூத மாசி 28 (12-03-1991) செவ்வாய்


## 1 கோ. 36 லட். ரூ. பெறுமதியான உணவுப்பொருள் வவுனியா உணவுக் களஞ்சியத்தில் தேக்கம்

ஒரு கோடியே 36 இலட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் வவுனியா களஞ்சியத்தில் தேங்கிக்கிடக்கின்றன. இவை வவுனியா நகருக்கு வெளியே உள்ள 13 கூட்டுறவு கிளைகளுக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டியவையாகும். 106 லோட் உணவு வகைகளை தாம் எடுத்துச் செல்ல வாகன வசதி இன்றி அவதிப்படுவதாக கூட்டுறவுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இராணுவ கெடுபிடி காரணமாகவும் உணவு வகைகள் நகருக்கு வெளியே எடுத்துச் செல்ல அனுமதி பெற வேண்டியதாலும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மக்களுக்கு விநியோகம் செய்யப்பட வேண்டிய நிவாரணப் பொருள்கள் இதில் அதிகமானவையாகும் எனவும் கூட்டுறவு வட்டாரங்கள் தெரிவித்தன. (11)

● இலங்கையில் நிகழும் மனித உரிமை மீறல் குறித்து

# அமெரிக்க அரசு கவலை

# 41 மில். டொலர் உதவி

### "சட்டத்தை அமுல் செய்வோர் அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்"

1992-ம் ஆண்டுக்கு உரிய உதவியாக அமெரிக்கா இலங்கைக்கு '41 மில்லியன் டொலரை' ஒதுக்கியுள்ளது. ஆனால் அமெரிக்க கொங்கிரஸுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இலங்கையில் இடம் பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து அமெரிக்க அரசு மிகுந்த கலேசம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மனித உரிமைகளைப் பொறுத்தவரையில் சட்டத்திற்குப் புறம்பான கொலைகளை தீவிரமாக விசாரிப்பதும் ஆயுதப் படைகளால் காணாமல் போனவர்கள் பற்றி நடவடிக்கை எடுத்து நீதி வழங்குவதும் ஸ்ரீலங்காவின் தலையாய பொறுப்பாகும்" என தெற்காசிய விவகாரங்கள் தொடர்பான ராஜாங்க உதவிச் செயலாளர் ஆசிய பசுபிக் விவகார உப குழுவுக்குத் தெரிவித்தார். தெற்காசியாவில் ஸ்ரீலங்கா ஒரு முரண்பாடுகள் மலிந்த

—04 ஆம் பக்கம் பார்க்க

## வரதராஜப்பெருமாள் அரசியல் தஞ்சம் கோரியதால் இந்தியாவில் புகலிடமாம்

வடக்குக் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் குடும்பத்துடன் இந்தியாவின் மத்திய மாநிலத்தில் பாதுகாப்பான வீடொன்றில் வசித்து வருகின்றார்.

இத்தகவலை இந்தியாவின் வெளிநாட்டுச் செயலாள

—04 ஆம் பக்கம் பார்க்க

## கிழக்குப்பகுதி வங்கிகளுக்கு சிங்களபாதுகாப்பு ஊழியர்கள்

திருகோணமலை, மட்டக்களப்பு ஆகியமாவட்டங்களில் உள்ள வங்கிகளுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக சிங்களவர்களே கடமையாற்றிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வாடிக்கையாளர்களாக வங்கிக்கு வருபவர்கள் இவர்களது பேச்சுக்கள் விளக்கமின்மையால் வங்கி அலுவல்களை முழுமையாக மேற்கொள்ளமுடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-11)

## முஸ்லிம் ஊர்காவற்படையால் தமிழ்க் குடும்பம் கைதானது

திருமலை மாவட்டத்திலுள்ள சல்லி கிராமத்தைச் சுற்றி வளைத்த முஸ்லிம் ஊர்காவற்ப்படையினர் பஞ்சலிங்கம் என்பவரையும் அவரது 5 மனைவியையும் 2 பிள்ளைகளையும் பிடித்துச் சென்றுள்ளனர்.

கடந்த மாதம் 27-ந் திகதி இரவு 7.45ற்கு இவ்வாறு பிடித்துச் சென்ற போதும் இன்றுவரை அவர்களிற்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. (71)

## கடற்படை தாக்குதல்

மணற்காடு, குடத்தனை, நாகர்கோவில் கடற்பகுதிகளிலிருந்து கடந்த சனிக்கிழமை மாலை பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

கடற்படையினரின் இப் பீரங்கி வேட்டுக்கள் தரைப் பகுதியில் வந்து விழுந்து வெடித்தன. (50)

## கோழும்பில் பென்சன் பெற தற்காலிக ஏற்பாடு

கொழும்பில் உள்ள பென்சன் தலைமையகத்தில் வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் ஒய்வூதியம் பெற அலைகிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 600 பேர் இங்கு பென்சன் பெற்றுள்ளதாக பென்சன் திணைக்களப் பணிப்பாளர் ஆர். டபிள்யூ. பியசேன தெரிவித்தார்.

இவர்கள் இங்கு பென்சன் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இது ஒரு தற்காலிக ஏற்பாடு எனவும் அவர் மேலும் சொன்னார்.

## கும்புறுப்பிட்டியில் 5 பேர் கொலை

கடந்த வெள்ளியன்று திருமலை மாவட்டத்திலுள்ள கும்புறுப்பிட்டி எனும் இடத்திற்குவந்த இராணுவத்தினர் 5 பொதுமக்களைச் சுட்டுக் கொன்றுள்ளனர். (71)

## உள்ளூராட்சி தேர்தலின் போது எதிர்க்கட்சியினரும் கருத்துக் கூற அனுமதிக்கப்படுவர் - ஜனாதிபதி

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல் சுதந்திரமாக நடாத்தப்படும் என உறுதியளித்துள்ளார் ஜனாதிபதி பிரேமதாஸ.

வத்தேகம கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி, தேர்தல் காலத்தில் ஐ. தே. க. உறுப்பினர்கள் கட்டுப்பாட்டுடன் செயற்படுவார்கள் என நம்புகிறேன் என்று குறிப்பிட்டார்.

தேர்தலில் எதிர்க்கட்சிகளும் தமது கருத்துகளை வெளியிட அனுமதிக்கப்படுவர் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க பல கோடி ரூபா தேவை

ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பாக இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க மேலும் பல கோடி ரூபா தேவைப்படுவதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தொழில் பாதிப்புக்கான நிவாரணத்துக்கு ஒரு லட்சத்து ஐயாயிரம் பேர் விண்ணப்பித்துள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

—04 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு உற்பத்தி பொருள்கள் கப்பலில் அனுப்ப முயற்சி?

கொழும்பில் உள்ள சில நிறுவனங்கள் தமது உற்பத்தி பொருள்களை கடந்த எட்டு மாதங்களாக யாழ்ப்பாணம் அனுப்ப முடியாதுள்ளன.

சோப்வகைகள், ஆடம்பரப் பொருள்கள் என்பவற்றை உற்பத்தி செய்யும் இந்த நிறுவனங்கள் இவற்றை அனுப்புவது குறித்து பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சு நடாத்தி வருவதாக கொழும்புச் செய்திகள் ...

## வடபகுதி விவசாயிகளுக்கு 500 பொல் மண்ணெண்ணெய்...

## பாராளுமன்ற அலுவல் குழு கூட்டம் அரச கட்சியினர் பகிஷ்கரிப்பு

## வடபகுதி விவசாயிகளுக்கு 500 பேரல் மண்ணெண்ணெய்

இம் முறை வந்த கப்பலில் 'கெயர்' ஸ்தாபனத்துக்கு 500 பேரல்கள் மண்ணெண்ணெய் வந்துள்ளது.

வடபகுதியில் பதினையாயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் எரிபொருள் வசதியின்றி பாதிக்கப்பட்டுள்ளதை யடுத்து 'கெயர்' ஸ்தாபனம் உதவ முன்வந்துள்ளது.

இந்த எரிபொருளுடன் விவசாய உபகரணங்களும் கப்பலில் வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (74)

ன.

தொழில் பாதிப்புக்கான நிவாரணத்துக்கு ஒரு லட்சத்து ஐயாயிரம் பேர் விண்ணப்பித்தபோதிலும் 65 ஆயிரம் பேருக்கு மட்டுமே 4000 ரூபா நிவாரணம் வழங்கப்

## வவுனியா நகரில் பதற்றம்

வவுனியா நகரம் எந்த நேரமும் பதற்றத்துடன் காணப்படுவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

அடிக்கடி துப்பாக்கி வெடிச் சத்தங்களும் ஷெல் சத்தங்களும் கேட்கின்றனவாம்.

கடைகளும் திடீர் திடீரென இழுத்து மூடப்படுவதுடன் மக்களின் நடமாட்டமும் குறைந்துள்ளது எனவும் மேலும் அவர்கள் தெரிவித்தனர். (66 70)

## நெடுந்தீவு, நயினாதீவு படகுச்சேவை எரிபொருள் கிடைக்காததால் நிறுத்தப்படும்

நெடுந்தீவு, நயினாதீவு, குறிகாட்டுவானுக்கிடையில் நடைபெற்று வரும் குமுதினிப் படகுச் சேவை எரிபொருள் பற்றாக்குறையால் நிறுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கு அப்படகு ஒரு முறை சென்று திரும்ப 20 லீற்றர் டீசல் தேவைப்படுகிறது.

இதனைப் பெறுவதற்கு சகல தரப்பிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் இதுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லை என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனால் நோயாளர், வர்த்தகர்கள், அரச உத்தியோகத்தர்கள் ஆகியோர் பெரும் பாதிப்புக்குள்ளாக வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இனிமேல் தொண்டர் ஸ்தாபனங்கள் ஏதும் இதற்கு உதவினாலே தவிர, இச்சேவையை நடத்த முடியாது எனத்தெரிவிக்கப்படுகிறது 66

## குடிவரவு குடியகல்வு பகுதிக்கு 265 மில்லியன் ரூபா கிடைத்தது

குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு இதுவரை கிடைக்காத வருமானமாக 265 மில்லியன் ரூபா கிடைத்துள்ளது.

அதுவும் 241 நாள்களில் இத்தத் தொகை பெறப்பட்டதாக அதிகாரி ஒருவர் கூறினார்.

அண்மைக்காலமாக வெளிநாடு செல்வோரின் தொகை அதிகரித்து வருவதாலே இவ்வாறு அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## பாராளுமன்ற அலுவல் குழு கூட்டம் அரச தரப்பினர் பகிஷ்கரிப்பு

எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தை பகிஷ்கரிப்பதையடுத்து, பாராளுமன்ற அலுவல்கள் குழுவின் கூட்டத்தையும் அரசாங்கத் தரப்பினர் பகிஷ்கரிக்கப்போவதாக அறிவித்துள்ளனர்.

இதனைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் கூட்டாக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளன.

அரச தரப்பு உறுப்பினர்

—04 ஆம் பக்கம் பார்க்க

## மந்திகை ஆஸ்பத்திரி நிலைமை கொழும்பில் உயர்மட்டப் பேச்சு

கொழும்பு சென்றுள்ள யாழ் சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுகாதாரப் பகுதி உயரதிகாரிகளுடன் மந்திகை அரசினர் வைத்தியசாலையின் தேவைகள் அபிவிருத்திகள் பற்றியும் கலந்துரையாடுவாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபை அண்மையில் இங்குள்ள குறைபாடுகள் அத்தியாவசிய தேவைகள் அபிவிருத்திகள் அடங்கிய அறிக்கை ஒன்றை யாழ் சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (15)

அனுப்புவது குறித்து பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சு நடாத்தி வருவதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

—04 ஆம் பக்கம் பார்க்க

## காரைநகரில் பீரங்கித்தாக்குதல் சிறுமிகள் காயம்

காரைநகரில் நேற்றிரவு 7 மணியளவில் கடற்படைப் படகிலிருந்து பீரங்கித்தாக்கு

—04 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை அகதிகள் மீண்டும் குவைத்தில்

குவைத் மீட்கப்பட்டதை யடுத்து குவைத்தில் இருந்து இடம்பெயர்ந்து அயல் நாடுகளுக்குச் சென்ற இலங்கை அகதிகள் மீண்டும் குவைத்துக்

... 4 ஆம் பக்கம் பார்க்க

## இறந்தவர்களின் பெயரில் அம்பாறையில் ஓய்வூதியம்

அம்பாறை மாவட்டத்தில் இறந்தவர்களின் பெயரில் ஓய்வூதியம் பெற்றதாக விசாரணைகள் நடைபெறுகின்றன.

சுமார் 73 பேரின் பெயரில் இந்த மோசடி நடைபெற்றது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இம்மோசடி இடம் பெற்றதையடுத்து. சகல பென்சன் வேலைகளும் கச்சேரிக்கு மாற்றப்பட்டுள்ளன. (33)

★ தமிழகத் தேர்தல் களம் சூடுபிடிக்கிறது; மேடைகள் தயாராகின்றன

# கருணாநிதி-ஜெயலலிதாவுக்கிடையே நேரடி மோதல்!

## தாக்கவேண்டாம் சாதனையைச் சொன்னாலேபோதும் என்கிறார் கலைஞர்!!





வரப்போகும் தமிழக சட்ட மன்றத்தேர்தலில் தி. மு. கவும் அ. தி. மு.கவும் தான் நேரடியாக மோதிக்கொள்ளும் பிரதான கட்சிகள் என தமிழகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் கருணாநிதியும், ஜெயலலிதாவும் தான் மோதிக்கொள்ளப் போகும் முக்கிய தலைவர்கள்!

அ. தி. மு. க. தனது தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தி. மு, க. வையும், கருணாநிதியையும் தான் விமர்சித்துப் பேச உள்ளது. ஆனால் தி. மு. க. தரப்பில் பிரசார சம்பந்தமாக சில முக்கிய முடிவுகள்எடுக்கப்பட்டுள்ளன.

சில நாட்களுக்கு முன்பு தி. மு. க. பேச்சாளர்கள் கூட்டத்தில் கருணாநிதி "நமது கழகப் பிரசாரங்களில் ஜெயலலிதாவின் பெயரை உச்சரித்து அவரைத் தாக்கியோ — விமர்சித்தோ பேச வேண்டாம். கடந்த இரண்டு ஆண்டுகால தி. மு. க. ஆட்சியில் நாம் கொண்டு வந்த திட்டங்களை விளக்கிப் பேசினால் மட்டுமே போதும்..." என்று உத்தரவிட்டுள்ளாராம்!

இது இவ்வாறிருக்க தேசிய முன்னணியின் முக்கிய தலைவர்களுள் ஒருவரான முன்னாள் பிரதமர் வி.பி. சிங்கிற்குத் தமிழகத்தில் இப்போது ராஜீவைவிட ஆதரவு அதிகரித்து வருவதாக கருத்துக் கணிப்பு தெரிவிக்கிறது.

### சக்கோட்டை சவேரியார் உற்சவம்

அலிவாய், சக்கோட்டை புனித சவேரியார் கோவில் வருடாந்த உற்சவம் கடந்த 4 ஆம் திகதி திங்கட் கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகியது.

ஒன்பது நாள் ஆராதனைகளைத் தொடர்ந்து 13 ஆம் திகதி புதன் கிழமை காலை 7 30 மணிக்கு திருநாட்திருப்பலியும் திருச் சொரூப பவனியும்நடை பெறும் என்று பங்குத் தந்தை அருட் திரு நேசநாயகம் அடிகளார் அறிவித்துள்ளார். (ப-17)

### சிறு விளம்பரம்

சேவை

புளொக் (Block) புகைப்படம் றபர் சீல் - களர் படம் - ஓவியம் பிறேம் போடுதல் கலர் பிறிண்டுகள் சிரிக்கேன்முதலியவற்றிற்கு நாடுங்கள்: கொழும்பு ஸ்ருடியோ - யாழ்ப்பாணம் 03049

## முரசொலிக்கு வந்த கடிதம்

### அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்த பாடசாலை மாணவிகள் மீது 'ராக்கிங்'

ஆசிரியர்,
முரசொலி.

பல்கலைக் கழக மாணவர்கள் புதிதாக அனுமதி பெற்று வரும் மாணவர் மீது 'ராக்கிங்' செய்வது என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். ஆனால் இன்று இவர்களின் 'ராக்கிங்' நாகரிகம் பல்கலைக்கழகத்திற்கு வெளியிலும் பரவியுள்ளது போல் தெரிகிறது.

01-03-1991 இல் மாணவர் ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட பேரணியில் கலந்து கொள்ளச் சென்ற மாணவிகள் மீதே ராக்கிங் பாணியிலான வக்கிரமான துன்புறுத்தல் நடவடிக்கைகள் பல்கலைக் கழக மாணவர்களால் மேற் கொள்ளப்பட்டது.

பல்கலைக்கழக வளவினுள் நுழைந்த பாடசாலை மாணவர்கள் அனைவரையும் கட்டாயபபடுத்தி சைக்கிள்களை உருட்டிக் கொண்டு போகச் செய்தமை, பேரணி முடிந்து மாணவிகள் திரும்பிப் போகையில் எமது சைக்கிள்களை பிடித்து இழுத்து நிறுத்தி, 'பெயரை சொல்லடி', 'முகத்தைப் பார்க்க வேண்டும் முகத்தை நிமிர்த்தடி', தொப்பியை கழட்டடி', 'என்ரை வடிவு உனக்குப் போதுமாடி ? - இப்படிப் பலவாறாக மாணவிகளுடன் சேட்டை விட்டனர். ஒருவர் இருவரல்ல 4000—5000 மாணவிகளுடன் சேட்டை விட்டனர்.

இவர்கள் வழமையாகவே பெண்களைக் கண்டால் இப்படித்தான் செய்வார்களா அல்லது எமது பேரணியைக் குழப்பும் நோக்குடன் செய்தார்களா எனத் தெரியவில்லை ஆனால் இதே சம்பவம் வீதியில் நடந்து ஈடுபட்டவர்கள் பல்கலைக்கழக மாணவர்களாக இல்லாதிருந்தால் இந்நேரம் "தண்டனை" அனுபவித்துக்கொண்டிருப்பார்கள்.

எமது பேரணியை ஏற்பாடு செய்த மாணவர் ஒன்றியத்தினர் எமது பாதுகாப்புக்கு எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவுமில்லை. இந்தச் சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கும் போதோ அல்லது பிறகோ எதுவித நடவடிக்கை•யும் எடுக்கவில்லை. மாணவர் ஒன்றியத்தினர் ஒரு பேரணியில் அதுவும் இப்படியான சூழ்நிலையில் பல்கலைக்கழக மாணவர்கள் இப்படி கீழ்த்தரமாக நடப்பார்கள் என நினைத்திருக்க மாட்டார்கள் தான் ஆனால் இப்படி நடந்த பிறகும் பேசாமல்

### "மூலிகை வளர்ப்புக்கு இதுவே இடம்"

- சித்த வைத்தியத்துறைத் தலைவர்

'போர்க்காலச் சூழ்நிலையில் சித்த வைத்திய மருந்துகளை ஆங்கில மருந்துகளுக்குப் பதிலாகப் பாவிக்கலாம் என்பதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். சித்த வைத்தியம் வளர்ச்சி அடைய யாழ்ப்பாணமே உகந்த இடம் என்று கருதப்பட்டதால் தான் இங்கு சித்த வைத்தியத்துறை ஆரம்பிக்கப்பட்டது' இவ்வாறு கைதடியில் யாழ் பல்கலைக்கழக சித்த வைத்தியத்துறையில் இடம் பெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய டாக்டர் பவானி குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த பல தரப்பட்ட சித்த வைத்தியர்களும் இத்துறையின்நலன் விரும்பிகளும் கலந்து கருத்துரை வழங்கினார்கள்.

டாக்டர் பவானி அங்கு மேலும் பேசுகையில் "சித்த வைத்தியத்தில் மூலிகைகள் முக்கிய அம்சம் வகிக்கின்றன. மூலிகைகளில் பல இனங்கள் உண்டு. சில வைத்தியர்களுக்கு மூலிகைகளை இனம் காணக் கூடத் தெரியாது" என்றார்.

இக்கருத்தரங்கில் யாழ் பல்கலைக்கழக விவசாயத்துறைத் தலைவர் திரு. சிவகடாட்சம் உரையாற்றினார். மூலிகைகள் பயிரிட்டு வளர்க்கும் திட்டத்திற்கு இவர் ஆலோசகராக இருப்பார்.

இவ் வைத்தியத்துறையின் வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் கருத்திற்கொண்டு அதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கு 11 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

### இடமாற்றம்

வேலணைக் கோட்டக்கல்வி அலுவலகத்தில் கடமையாற்றிய எம். ஜி அல்பிறட் கொழும்பு கல்வித் திணைக்கள வெளியீட்டுப் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளார். (ப-17)

★ க. பொ. த. உயர்தர விசேட பரீட்சை:

### இடம் பெயர்ந்த மாணவர்கள் மீள விண்ணப்பிக்க வேண்டும்

1990 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றாத வடக்கு, கிழக்கு மாகாணத்தின் பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்குமென 1991 ஏப்ரல் மாதம் 22 ஆந் திகதி முதல் மே மாதம் 15 ஆந் திகதி வரை க பொ. த. (உயர்தர) விசேட பரீட்சையொன்று நடைபெறும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணப் பகுதியில் அக் காலத்தில் நிலவிய கலவர நிலைமையினால் மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாதுபோன பாடசாலை தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 1991 மார்ச் 15 ஆந் திகதிக்கு முன்பாகத் தமது விண்ணப்பங்களை அவ்வப் பிரதேசக் கல்விப் பணிப்பாளர்களிடம் நேரில் ஒப்படைக்கவும். அல்லது நேரடியாகப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்

## சேவைநலம் பாராட்டு விழா
### தொழில் நுட்பக்கல்லூரி - யாழ்ப்பாணம்

சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் திரு. சி இராஜேந்திரா அவர்களின் பிரிவுபசார வைபவம் 17-03-1991 ஞாயிற்றுக்கிழமை காலை 9. 00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரியின் மாணவர்களும், பழைய மாணவர்களும், நிரந்தர, பகுதிநேர விரிவுரையாளர்களும், அலுவலக உத்தியோகஸ்தர்களும் தயவு செய்து சமூகம் கொடுக்கும் படி அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

- மாணவர் விழாக் குழுவினர்.

தொழில் நுட்பக் கல்லூரி
கொக்குவில்,
யாழ்ப்பாணம். 03058

## கணக்கு லிகிதர் பதவி

வலி. கிழக்கு வடபகுதி ப. நோ. கூ. சங்கம்
அச்சுவேலி

மேற்படி பதவிக்கான விண்ணப்பம் எமது சங்கத்தால் சங்க எல்லைப்பரப்புக்குட்பட்டவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளது விபரங்கள் அடங்கிய விளம்பரம் இனை விற்பனை நிலையங்களில் தொங்க விடப்பட்டுள்ளது. இணை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளவும்.

03059 பொதுமுகாமையாளர்

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வில்லை. மாணவி ஒன்றுபத்தினை ஒரு பேரணியில் இதுவும் இப்படியான சூழ்நிலையில் பல்கலைக்கழக மாணவர்கள் இப்படி கீழ்த்தரமாக நடப்பார்கள் என நினைத்திருக்க மாட்டார்கள் தான் ஆனால் இப்படி நடந்த பிறகும் பேசாமல் இருப்பது வேதனையையும் சந்தேகத்தையும் தருகிறது.

எமது பிரதேசத்தின் நீதி நிர்வாகத்தை பராமரிப்பவர்கள் இந்த கவலைக்குரிய நிகழ்வுக்கு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளார்கள். 'மாட்டு வண்டில் ஓட வேண்டும்' என தண்டிப்பார்களா? அல்லது பல்கலைக்கழக மாணவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக மன்னித்து இவர்களின் நடவடிக்கைகளை ஏற்று நியாயப்படுத்தப் போகின்றார்களா?

பொது மக்களே, பல்கலைக்கழக நிர்வாகமே, தேசத்தைக் கட்டி எழுப்ப வேண்டிய பல்கலைக்கழக மாணவர்களின் இந்த நடத்தை பற்றி நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்?

ஆனால்ஒன்று மட்டும் நிச்சயம். யாராவது ஒருவர் தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால் இனி மாணவிகள எந்தப் பேரணியிலும் கலந்து கொள்ள முடியாது என்பது மட்டுமல்ல; தமது நடவடிக்கை பிழையில்லை என அனைவரும் கூறிவிட்டால் பல்கலைக்கழக மாணவர்கள் வீதியில் வைத்து மட்டுமல்ல, பாடசாலைகள், வீடுகளுக்குள் நுழைந்தும் இதைச்செய்யப் போகிறார்கள். இவர்களை முன்மாதிரியாக கொண்டு வெளியாரும் இதேபோல் நடக்கப் போகிறார்கள், இதனையும் அனைவரும் வாய்மூடி ஏற்றுக்கொள்ள வேண்டியது தான்.

> "நேப்பாளத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் ஈழத் தமிழருக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டப் பேரணி!
> யாழ்ப்பாணத்தில் பேரணியில் கலந்து கொண்ட பாடசாலை மாணவிகள் மீது பல்கலைக்கழக மாணவர் ராக்கிங்!!"

கச்சேரி நல்லூர் வீதி,
சுண்டுக்குளி.
04-03-91

பாதிப்புற்ற மாணவி
இ. நளாயினி

டம் நேரில் ஒப்படைக்கவும். அல்லது நேரடியாகப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் க பொ த(உயர் தர) விசேட பரீட்சை-1990' எனக் குறிப்பிட வேண்டும். பாடசாலையிலிருந்தும், தனிப்பட்ட முறையிலும் இரண்டாம் முறையாகத் தோற்றும் பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு ரூபா 20/- என்ற முறையில் கட்டணம் செலுத்த வேண்டும்.

முன்னர் ஆகஸ்ட் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள், தற்போது இடம் மாறியிருந்தால் அல்லது விண்ணப்பித்த நகரத்தை மாற்றிப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பினால் கீழ்க்காணும் விபரங்களை உடனடியாகப் பதிவுத் தபால் மூலம் பரீட்சை ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டும். இக்கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'க பொ த உயர் தர) விசேட பரீட்சை, 1990 - நகர மாற்றம்' எனக் குறிப்பிடல் வேண்டும்.

1. பரீட்சார்த்தியின் பெயர்:-
2. தற்போது பரீட்சைக்குத் தோற்ற விரும்பும்
   நகர எண்:-
   நகரம்:-
3. விண்ணப்பித்த பாடங்கள்:-
   1............................ 2............................
   3 ............................ 4............................
4. ஊடக மொழி:-
5. தற்போதைய முகவரி:-
6. பாடசாலை/தனிப்பட்ட
   விண்ணப்பதாரியா என்ற விபரம்:-
7. முன்பு விண்ணப்பித்த பாடசாலையின்
   பெயர்/நகரம்:-
8. முன்னைய முகவரி:-

(1990 ஆகஸ்ட்டில் நடைபெற்ற க.பொ.த. (உயர்தர)ப் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகள் இவ் விசேட பரீட்சைக்குத் தோற்றத் தகுதியற்றவர்கள் என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 20 | 3 |
| — | — |
| 10 | 02 |
| — | — |
| 1937 | 1988 |



### தி. சி. சண்முகலிங்கம்

திதி: 12 - 03 - 1991

ஆண்டு மூன்று மறைந்தாலும்
அப்பா உம்மை நாம் மறவோம்
எப்போதும் உங்கள் நினைவில்
எம் வாழ்வு நடக்கிறது
உங்கள் ஆத்மா சாந்தி பெற
பிரார்த்திக்கின்றோம்.

"சுகந்தம்"
இணுவில் கிழக்கு.

அன்பு மனைவி,
பிள்ளைகள்.

03051

## ஹவ்லொக்வீதி குண்டு வெடிப்பால் 'போரூட்'தலைமையகம் முற்றாகச் சேதம்

கடந்த 2 ஆம் திகதி கொழும்பு ஹவ்லொக்வீதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 'போரூட்' நிறுவனத்தின் பிரதான தலைமையகம் பலத்த சேதமடைந்துள்ளதாகப் போரூட் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொம்பியூட்டர் சாதனங்கள், ரெலெக்ஸ் மின்சார உபகரணங்கள் உட்படச் சுமார் 3 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட் சேதம் அங்கு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

காலை 8 மணி போரூட் அலுவலகத்தில் முக்கிய கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது இக் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றபோதும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இக்கூட்டத்தில் வடபகுதியைச் சேர்ந்த சில தமிழ் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (70)

## சாவகச்சேரியில் தமிழ்த்தினப் போட்டி; உசன், நகர்க்கோத்தணிகள் முன்னணியில்

சாவகச்சேரி கோத்தணி பாடசாலைகளிடையிலான தமிழ் தினப் போட்டிகள் சென்ற சனிக்கிழமை காலை முதல் மாலை வரை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெற்றன.

இப் போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் சாவகச்சேரி கோட்ட தமிழ் வளர்ச்சிக் கழகம் செய்திருந்தது. ஏழு கொத்தணிகளைச் சேர்ந்த 65 பாடசாலைகள் போட்டிகளில் கலந்துகொண்டன.

மேற்படி போட்டியில் இயல், இசை, நாடக நிகழ்ச்சிகளே சிறப்பிடம் பெற்றன. நடன நிகழ்ச்சிகளில் அனேகமானவற்றில் சாவகச்சேரி நகர் கொத்தணியும், பாவோதல், இசை நாடக நிகழ்ச்சிகளில் அனேகமானவற்றில் உசன் கொத்தணியும் முன்னணியைப் பெற்றன.

இப் போட்டியில் வெற்றி பெற்ற நபர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் முதலாம் இடத்தை பெற்ற போட்டியாளர்கள் மாகாண போட்டியில் கலந்து கொள்ளவும் உள்ளனர். (ப-26)

## சர்வதேச கிரிக்கெட் போட்டித்தொடர் ஆஸி. அணி முன்னணியில்

அவுஸ்ரேலியாவில், மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் நடைபெற்றுவரும் சர்வதேச கிரிக்கெட் போட்டித்தொடரில், நேற்று முன்தினம் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள், ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 45 ஓட்டங்களால் வெகு இலகுவாக மேற்கிந்திய தீவுகள் அணியை தோற்கடித்தது. இரண்டிற்கு பூச்ஜியம் என்ற நிலையில் முன்னணியில் நிற்கிறது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடக் களத்தில் இறங்கிய அவுஸ்திரேலிய அணி பருவநிலை காரணமாக 50 ஓவர்களில் இருந்து 34 ஓவர்களாக குறைக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களில் தனது 9 இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது.

வெற்றிபெற ஒரு ஓவருக்கு சராசரி 5.06 ஓட்டங்களை எடுக்க வேண்டிய நிலையில் தனது ஆட்டத்தை ஆரம்பித்த மேற்கிந்திய தீவுகள் அணி, 31 ஓவர்களில் துரிதகதியில் ஒன்றன் பின் ஒன்றாக சகல இலக்குகளையும் பறிகொடுத்து 127 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதினால் தோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று. (16)

### கல்வி டிப்ளோமா பகல் நேர வகுப்புகள்

திறந்த பல்கலைக்கழகத்தில் கடந்த வருடம் பதிவு செய்து கொண்ட பட்டமேற் கல்வி டிப்ளோமாவுக்குரிய பகல் நேரவகுப்புகளும் 15ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ் பிரதேச நிலையத்தில் இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-7)

# சிங்கள யுவதிகளுக்கு இராணுவப் பயிற்சி

# எல்லைப்புறக் காவலில் ஈடுபடுத்தப்படுவராம்!

வவுனியாவின் எல்லைப் பிரதேசங்களைச் சேர்ந்த சிங்களயுவதிகளுக்கு ஆயுதப் பயிற்சியளிக்கும் திட்டமொன்றை ஸ்ரீலங்காஇராணுவம் நடைமுறைப்படுத்த முனைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மதவாச்சி, பதவியா, ஹொரவப் பொத்தான, மாமடுவ, செட்டிகுளம் ஆகியவற்றை உள்ளடக்கிய சிங்களப்பகுதிகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட யுவதிகளுக்கே இந்த ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

இராணுவத்தின் பெண்கள் தொண்டர் அணியாக ஆயுதப் பயிற்சி பெற்ற இந்த சிங்கள யுவதிகள் கருதப்படுவர் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

பயிற்சியின் பின்னர் இவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டு, ஊர்காவல் படையுடன் கிராமப்புறங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படுவர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே வவுனியா தச்சன்குளம் இராணுவ முகாமில் பயிற்சியை மேற்கொண்டிருந்த ஒரு தொகுதி சிங்கள யுவதிகள் கடந்த சனிக்கிழமை பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறியதாகவும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (16)

## தென் பகுதியில் சேவையிலீடுபடுத்துவதற்கு தென் கொரியாவிலிருந்து ரயில் பெட்டிகள்

தென்பகுதி ரயில் சேவைக்கென புதியரயில்பெட்டிகளை புகையிரதப் பகுதி இறக்குமதி செய்துள்ளது.

இந்த ரயில் பெட்டிகள் கொழும்பு பொல்காவல, கொழும்பு—நீர்கொழும்பு, கொழும்பு—அளுத்கம சேவைகளில் பயன் படுத்தப்படவுள்ளன.

200 கோடி ரூபா செலவில் தென்கொரியாவிலிருந்து இந்த ரயில் பெட்டிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

## 3வருட சேவை செய்த பட்டதாரி ஆசிரியர்கள் டிப்ளோமா பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின்படிப்புக் கல்வி டிப்ளோமாப் பயிற்சியை மேற்கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஐம்பது வயதுக்கு உட்பட்ட, ஆகக்குறைந்தது மூன்று வருட சேவையைப் பூர்த்தி செய்துள்ள பட்டதாரி ஆசிரியர்களே இப் பயிற்சியைத் தொடர விண்ணப்பிக்கலாம்.

முழுநேரம், பகுதிநேரம் என இருபிரிவுகளாகப் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா விரிவுரைகள் இடம் பெறவுள்ளன.

## முஸ்லிம் - சிங்களவர் ஐக்கியம் 'நிலைக்க வேண்டும்' என்கிறார் இம்தியாஸ்

"முஸ்லிம், சிங்களவர் ஐக்கியம் என்றும் நிலைக்க வேண்டும்" என்று வீடமைப்பு ராஜாங்க அமைச்சரும், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத் தலைவருமான இம்தியாஸ் கூறியுள்ளார்.

'ராஜரட்டைப் பகுதியில் வாழும் முஸ்லிம்கள் சிங்கள மக்களுடன் ஐக்கியமாக வாழ்வது மகிழ்ச்சிக்குரியது. இந்த ஒற்றுமை என்றும் நிலைத்திருக்க வேண்டும்' என்றும் அவர் பதவியாவில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் பேசுகையில் வலியுறுத்தினார்.

### அம்பன் பகுதியில் குரங்குகள் அட்டகாசம்

அம்பன், குடத்தனை, நாகர்கோவில் பகுதிகளில் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

இப்பகுதிகளில் உள்ள பயிர்களை அட்டகாசம் செய்யும் குரங்குகள் நாசப்படுத்தி விவசாயிகளுக்குக் கஷ்டங்களை விளைவிக்கின்றன. (50)

## யாழ் தம்பதிகள் கட்டுநாயக்காவில் கைது! போலி விசாக்கள் காரணமாம்

போலிக் கடவுச் சீட்டுக்கள் மற்றும் போலி விசாக்கள் மூலம் லண்டன் செல்ல முற்பட்டதாகக் கூறப்படும் இருவரைக் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இரகசிய பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

தம்பதிகளான இவ்விருவரும் யாழ் வாசிகள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நீர் கொழும்பு நீதிமன்றத்தில் இவர்கள் இருவரும் ஆஜர் செய்யப்படவுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் கூறின. (11)

## யாழ் விஞ்ஞானிகள் சங்கம் உதயம் தலைவராக பேராசிரியர் துரைராஜா தெரிவு

யாழ் விஞ்ஞானிகள் சங்கத்தின் முதலாவது கூட்டம் அண்மையில் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் யாழ் விஞ்ஞானிகள் சங்கத்தின் முதலாவது நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: பேராசிரியர் அ. துரைராஜா, உப தலைவர்: என். பாலகிருஷ்ணன், பொதுச் செயலாளர்: பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம், உதவிப் பொதுச் செயலாளர்: டாக்டர் எஸ். சிவராஜா. கணக்காளர்: டாக்டர் ஆர். எஸ். நவரட்ணம், உதவிக் கணக்காளர்: எஸ். சத்தியசீலன்.

பிரிவுத் தலைவர்கள்: தூய விஞ்ஞானம்: பேராசிரியர் என் மகேஸ்வரன், பிரயோக விஞ்ஞானம்: பேராசிரியர் என். நவரட்ணராஜா, பௌதிக விஞ்ஞானம்: பேராசிரியர் எஸ் சிவஞானசுந்தரம், சமூக விஞ்ஞானம்: பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை. (70)

## உங்களுக்கு உரியவையா?

கண்டெடுக்கப்பட்ட பின்வரும் அடையாள அட்டைகள் முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் ஆசிரிய பீடத்தில் அலுவலக நேரத்தில் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

வின்சன் பிரிட்டோ-கொண்டாவில், இராசதுரை மகேஸ்வரன், பெருமாள் கோவில் தெற்கொழுங்கை, கணபதிப்பிள்ளை சந்திரசேகரம்-காங்கேசன்துறை, நாகமுத்து இராசரட்ணம் கெக்கிறாவ, பேசாலை, பி. இருபாகரன்-கொண்டாவில்.

கே.சிவதாசன்-வவுனியா, வி நாகேந்திரன் காங்கேசன்துறை, செல்வராசா சின்னத்தம்பி- சண்டிலிப்பாய், கணேசமூர்த்தி சுயமுகன் பருத்தித்துறை, பாலகிருஷ்ணன் பாலச்சந்திரன் பருத்தித்துறை, கதிரேசன் நடராஜலிங்கம்- ஹெட்டிபொல ஜாஎல, சண்முகராஜா செந்தில்குமார் குதிசெட்டிதி, குருநாதபிள்ளை குமாரராஜா இரத்தினபுரி, குமார

## முறைசாராக்கல்விவளநிலையங்கள்

## 50 கோடி விரயமாகிறது எனவே தீர்வும் அவசியம் என்கிறார் பிரதமர்

தனது 9 இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது.

பிரதேச நிலையத்தில் இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (ப-7)

## முறைசாராக்கல்விவள நிலையங்கள் ஆறு கோட்டங்களில் இயங்கும்

யாழ் மாவட்டத்திலுள்ள ஆறு கல்விக் கோட்டங்களிலும் முறைசாராக் கல்வி உபவள நிலையம் விரைவில் திறக்கப்படுமென முறை சாராக் கல்வி அதிகாரி ச. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இதன் மூலம் மாணவர்கள் கல்வி, தொழில்நுட்ப நூலக சேவைகளைப் பெறமுடியும்.

அத்துடன் உள்ளூர் உற்பத்தியாளர்களின் பொருள்களைச் சந்தைப்படுத்தவும், அதனை ஊக்குவிக்கவும் இவ் உபவளப்பிரிவு உதவி செய்யுமெனவும் அவர் தெரிவித்தார். (70)

## காரைநகரில் மகா சிவராத்திரி

ஈழத்துச் சிதம்பரம்- காரைநகர் சிவன்கோவிலில் மகா சிவராத்திரி விழா காரைநகர் மணிவாசகர் சபையின் ஏற்பாட்டில் 14 ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

அன்று மாலை 5. 30 மணி முதல் நான்கு சாமம் விசேட அபிஷேகம் பூசை, ஆராதனைகள் இடம் பெறவுள்ளன.

## 50 கோடி விரயமாகிறது எனவே தீர்வும் அவசியம் என்கிறார் பிரதமர்

வடக்குக் கிழக்குப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கான காலம் அண்மித்து விட்டது எனப் புதிய பாதுகாப்பு அமைச்சரும், பிரதம மந்திரியுமான டி. பி. விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

'வடக்கு கிழக்கு இராணுவ நடவடிக்கைகளிற்கு ஐம்பது கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் செலவிடப்படுகின்றது.'

'வடக்கு கிழக்கு பிரச்சினையை விரைவில் தீர்த்து வைப்பதன் மூலம் இப் பணத்தை அபிவிருத்திக்குச் செலவிட அரசு தீர்மானித்துள்ளது.'

பிரதமர் டி. பி. விஜேதுங்க உடுநுவரவில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## ரஞ்சனுடன்கடைசியாககதைத்தவர் நானே என்கிறார் ராஜமனோகரி

ரஞ்சன் விஜேரத்தின கொலை செய்யப்படுவதற்கு முன் அவருடன் கடைசியாகத் தொலைபேசியில் கதைத்தவர் ராஜாங்க அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன் ஆவார்.

இத்தகவலை அவரே பாராளுமன்றத்தில் வெளியிட்டார்.

''அவர் கொல்லப்படுவதற்கு 20 நிமிடங்களுக்கு முன் அவருடன் தொலைபேசியில் கதைத்தேன். கடைசியாக அவருடன் பேசியவர் நானாகத்தான் இருக்க முடியும்'' என்று அவர் சொன்னார்.

## ஆசிரியர் ரியூசன் கொடுக்க முடியாது;மீறினால் தண்டனை!

### புதிய சட்டம் கொணடுவர கல்வி அமைச்சு ஆலோசனை

பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் ரியூசன் கொடுக்க முடியாத சட்டம் ஒன்று கொண்டுவரப்படவுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது கடும் தண்டனை வழங்கவும் கல்வி அமைச்சு ஆலோசித்து வருவதாக அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை பாடசாலைகளில் மேலதிக வகுப்புக்களை நடத்த அமைச்சு திட்டமிட்டு வருகின்றது. ஆசிரியர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகளை வழங்கி அதே பாடசாலையில் வகுப்புக்கள் நடத்தப்படும்.

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களே மேலதிக வகுப்புக்களில் போதிக்கப்படும். (11)

டாவில், இராசதுரை மகேஸ்வரன், பெருமாள் கோவிலடி தெற்கொழுங்கை, கணபதிப்பிள்ளை சந்திரசேகரம்-காங்கேசன்துறை, நாகமுத்து இராசரட்ணம் கெக்கிறாவ, இராசலிங்கம் வடிவழகன்-நாவற்குழி, பிலிப்பையா மாசிலாமணி-வண்ணார் பண்ணை பாலகுமாரன் பாலச்சந்திரன் துன்னாலை சுந்தரம் அமிர்தானந்த சிவம் - சாவகச்சேரி வடக்கு, சவரியான் ஆரோக்கியம் லோகு-5 ஆம் வட்டாரம்

## கணக்கெடுப்பு விரைவில் ஆரம்பம்

மகா வித்தியாலயங்களின் 1990 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்தக் கணக்கெடுப்பு வேலைகள் சித்திரை முற்பகுதியில் யாழ் கல்வித் திணைக்களத்தினாலும், கோட்டக்கல்வி அலுவலக ஊழியர்களினாலும் ஆரம்பிக்கப்பட உள்ளது.

அதற்கு ஏதுவாகப் பொருட் பதிவேட்டுப் புத்தகங்களை 1990 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு உள்ளபடி மீதிலைச் சரி செய்துவைக்குமாறு யாழ் கல்வித் திணைக்களக் கணக்காளர் சம்பந்தப்பட்ட மகா வித்தியாலய அதிபர்களைக் கடிதமூலம் பணித்துள்ளார். (ப-17)

திதுறை, கதிரேசன் நடராஜலிங்கம்- ஹெட்டியகம ஜாஎல, சண்முகராஜா செந்தில்குமார் குத்செட்டிதி, குருநாதபிள்ளை குமாரராஜா இரத்தினபுரி, குமாரலிங்கம் மோகனதாஸ்-சாம்பல்தீவு, பாறுபதி சோதியன் நீர்வேலி தெற்கு, சச்சிதானந்தன் கனுவல்லி அல்லைப்பிட்டி, சுப்பிரமணியம் ரோகினிதேவி சோப்பாய் தெற்கு.

மயில்வாகனம் நாகேஸ்வரி, குமரபுரம் பரந்தன், தங்கரெத்தினம் கதிர்காமநாதன்-வல்வெட்டித்துறை, ரமணி ஆறுமுகம்-எருக்கேணி தண்ணியூற்று, இலட்சுமி தம்பிராசன்- கரவெட்டி கிழக்கு, சகுந்தலாதேவி நிக்கிலாப் பிள்ளை- நச்சமோட்டை, புஷ்பவதி சுதிர்த்தம்பி கொடாவில்.

## அடையாளம் காண உதவுவீர்களா?

உரிமை கோரப்படாத இளைஞரின் சடலமொன்று சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைச் சவச்சாலையில் உறவினரின் வருகையை எதிர்பார்த்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த இளைஞர் தனுக்காயைச்சேர்ந்தவர் எனவும் வியாபார நோக்கத்திற்காகச் சாவகச்சேரிக்கு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ப33

## ஹவ்லொக் வீதி குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட படையினரின் குடும்பத்துக்கு நஷ்டஈடு

அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன கொல்லப்படக் காரணமாக இருந்த வெடிகுண்டில் சிக்கி உயிரிழந்த விசேட அதிரடிப் படையினருக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சருக்கு பாதுகாப்பாக சென்ற அதிரடிப்படையினர், மெய்ப்பாதுகாப்பாளர் சார்ச்சாரதி ஆகியோரின் குடும்பத்தினருக்கு ஜனாதிபதி பிரேமதாஸ இழப்பீட்டு தொகைகளை வழங்கியுள்ளார்.

## இந்தோனேஷியா மாநாட்டில் இலங்கைத் தமிழர் மூவர்

தென்புலோலியூர் டாக்டர் கே. சதாசிவம், பருத்தித்துறையைச் சேர்ந்த டாக்டர் ரீ. சிவசுப்பிரமணியம் பதுளையைச் சேர்ந்த எஸ். கமலநாதன் ஆகிய மூன்று தமிழர்களும் இந்தோனேஷியாவில் நடைபெற்ற குடும்ப நலத்திட்டக் கல்விச் சுற்றுலாவிலும் சர்வதேசக் கருத்தரங்கிலும் கலந்து கொண்டு நாடு திரும்பினர்

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், வியட்னாம், யேமன், எகிப்து, தாய்லாந்து, சீனா, துருக்கி ஆகிய பத்து நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இக்குடும்ப நலத்திட்டக் கல்விச் சுற்றுலாவிற்கும் சர்வதேசக்கருத்தரங்கிற்கு மான நிதி உதவிகளை ''ஐக்கிய நாடுகள் குடிசன நிதியம்'' (யூ என். எப். பி.) வழங்கியிருந்தது. (15)

## இரண்டு மணிநேரத்தில் நிறைவேறிய இந்திய பட்ஜட்

இந்திய வரலாற்றிலேயே முதற்தடவையாக நேற்று பட்ஜட் கூட்டத்தொடர் இரண்டு மணித்தியாலங்களில் முடிவடைந்தது.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால பட்ஜட், ரயில்வே பட்ஜட் மற்றும் ஜனாதிபதி ஆட்சியுள்ள பஞ்சாப், காஷ்மீர், தமிழ்நாடு, அஸாம் மாநிலங்களின பட்ஜட் என்பன குரல் வாக்கெடுப்பு மூலம் இரண்டு மணித்தியாலங்களிலேயே நிறைவேறின.

இடைக்கால பட்ஜட் அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டதால் நாடாளுமன்றத்தை உடனடியாக கலைத்து பொதுத்தேர்தலை நடாத்த ஆவன செய்யுமாறு இந்திய அரசியல் கட்சிகள் அனைத்தும் ஜனாதிபதி வெங்கட்ராமனை நேற்று வற்புறுத்தின.

## கிளிநொச்சி, பரந்தன் தபால்கள் இம்முறை கப்பலில் வந்துள்ளன

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் லங்காசிறிக் கப்பலில் யாழ் குடாநாட்டுக்கு வந்த தபாற் பொதிகளில் இம்முறை கிளிநொச்சி, பரந்தன் ஆகிய தபாலகங்களுக்கான தபாற் பொதிகளும் வந்துள்ளன.

இத் தபாற் பொதிகளும் நேற்றுப் பிரதம தபாலகத்தினரால் எடுத்து வரப்பட்டன.

கிளிநொச்சி, பரந்தன் பகுதி தபால்கள் இதற்கு முன்னர் வவுனியா வரையுமே வந்தன. (33)

## வெளியூர்த் தபால்கள் இன்று முதல் விநியோகம்

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் லங்காசிறி கப்பலில் வந்த 279 தபால் பொதிகள் நேற்று யாழ் பிரதம தபாலகத்தினரால் எடுத்து வரப்பட்டன.

இவை இன்று தரம் பிரிக்கப்பட்டு தபால் விநியோக சேவை வழமைபோல் நடைபெறும்.

குடாநாட்டுத் தபாலகங்களுக்கான தபால் பொதிகளில் சில நேற்று எடுத்துச் செல்லப்பட்டன.

மிகுதித் தபால் பொதிகள் இன்று ஏனைய தபாலகங்களுக்கு வழமைபோல் அனுப்பிவைக்கப்படுமென்றும் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (33)

## 'சீநோர்' ஊழியர்களுக்கு சம்பள முற்பணம் கிடைத்தது

குருநகர் சீநோர் தொழிலாளர்களுக்கு நேற்று முன்

லேயே கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கது.

● பொலிஸாருக்கு கிடைத்த முதலாவது வாக்குமூலம்

# குண்டு வெடிப்பதற்கு இரு நிமிடத்திற்கு முன்னரே ரொயோட்டா வான் வந்தது

''வெள்ளை நிற ரொயோட்டா ஹையேஸ் வான் ஒன்று குண்டு வெடிப்பதற்கு இரு நிமிடங்களுக்கு முன்பாக கெப்பட்டிப்பொல மாவத்தை - ஹவ்லொக் வீதிச்சந்தியில் உள்ள வளைவில் வந்து நின்றது''.

இவ்வாறு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன கொல்லப்பட்ட வெடிகுண்டு சம்பவம் குறித்து வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் சந்தியில் உள்ள பெண்கள் விடுதியில் காவற்கடமையில் நின்றிருந்த காவலர் ஒருவரே வாக்கு மூலம் அளித்துள்ளார்.

குண்டு வெடிப்புச்சத்தம் கேட்டது. அதைத்தொடர்ந்து விடுதிக்கட்டிட இடிபாடுகள் எனக்கு மேல் விழ்ந்தன. இதனால் நான் காயமடைந்தேன் என அவர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இவரே குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டு வாக்குமூலம் அளித்தமுதலாவது நபராகும்

இதேவேளை அமைச்சர் ரஞ்சனின் கொலைதொடர்பாக மேலும் சில செய்திகள் வெளியாகியுள்ளன. சம்பவ தினம்காலை 8.24க்கு அமைச்சர் தனது குண்டு துளைக்காத பென்ஸ்காரில் புறப்பட்டுள்ளார் 8.25 மணிக்கு டிக்மன்ஸ் வீதியில் போக்குவரத்துப்பொலிஸார் வாகனப் போக்குவரத்தை கட்டுப்படுத்தி அமைச்சரின் வாகன அணியை தொடர்ந்து செல்ல அனுமதி வழங்கினர்.

நாற்பதுமைல் வேகத்தில் சென்றுகொண்டிருந்த அணியின் முன்னே சென்ற படையினரின் வாகனத்தில் இருந்து இவர்கள் செல்லும் பாதை ராஜகிரிய முகாமுக்கு அறிவிக்கப்பட்டு வந்தது. காலை 8.26க்கு ''நாங்கள் ராணுவ தலைமையகத்திற்கு அருகில் வந்து கொண்டிருக்கின்றோம் என அறிவிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து எவ்வித தொடர்பும் ஏற்படவில்லை. இதையடுத்து விடயம் அறிய ராஜகிரிய முகாம் இன்ஸ்பெக்டர் உடலவல இராணுவ தலைமையகப் பகுதிக்கு விரைந்தார். குண்டு வெடிப்புச்சத்தம் ஹேர்ட்டன் பிளேஸில் உள்ள அமைச்சரின் மனைவிக்கும் கேட்டதாம். இதைத்தொடர்ந்து திருமதி விஜேரட்ன சத்தம் குறித்து அங்கு நின்ற பாதுகாப்பு அதிகாரியிடம் கேட்ட போது ஹவ்லொக் வீதி குண்டு வெடித்துள்ளது. அமைச்சரின் காருக்கு சிறு சேதமே'' என பதிலளிக்கப்பட்டது.

## வாகன இறக்குமதியாளர்கள் விசாரிக்கப்படுகின்றனர்

ஹவலொக் வீதி குண்டு வெடிப்புக்கு பயன்படுத்தப்பட்ட ரொயோட்டாவானின் உதிரிப்பாகங்களை சேகரித்துள்ள அரச பகுப்பாய்வாளர் திணைக்கள அதிகாரிகள் நேற்று கொழும்பின் வாகன இறக்குமதியாளர்கள் பலருடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

இதன் மூலம் இறக்குமதி செய்த நிறுவனம் அதை கொள்வனவு செய்தவர்கள் போன்ற சில தகவல்களை பெறலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகள் தொடரும் என அறிவிக்கப்படுகிறது.

## முல்லைத்தீவு கல்வி அலுவலகம் ஊழியர் வரவு குறைவு

முல்லைத்தீவு கல்வித் திணைக்களம் தற்சமயம் புதுக்குடியிருப்பில் இயங்கி வருகிறது இங்கு கடமையாற்றும் ஊழியர்கள் போதியளவு காரியாலயத்துக்கு வருகை தராமையினால் ஆசிரியர்கள் தமது அலுவல்களை செய்ய முடியாமல் கஷ்டப் படுவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சம்பளக்கொடுப்பனவு வேலைகள் தாமதமாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மற்ற ஊழியர்கள் இவ் வேலைகளை முடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக இங்கு கடமை யாற்றும் ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

அநேக ஊழியர்கள் தொடர்ந்து கடந்த இரண்டு மாதங்களாக அறிவிக்காமல் வராமல் நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப17)

## கணித, விஞ்ஞான ஆசிரியர்களின் விவரம் சேகரிக்கப்படுகிறது

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் ஆண்டு 6 தொடக்கம் 11 வரையுமான வகுப்புக்களில் கணித, விஞ்ஞான பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களின் விவரங்களை இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக திரட்டி அனுப்பிவைக்குமாறு விஞ்ஞான கல்வி அதிகாரி திரு. எஸ். சுந்தரலிங்கம் சகல அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இவ்விவரத்தில் கணித, விஞ்ஞான பாடம் கற்பிக்கும் பட்டதாரி பயிற்றப்பட்ட, தாரதரப்பத்திரமற்ற, பயிலுநர் ஆகிய ஆசிரியர்களின் புள்ளி விவரங்கள் கோரப்பட்டுள்ளது

அத்துடன் ஆண்டு6தொடக்கம் ஆண்டு 11 வரை பாடங்களை பயிலும் மாணவர்களின் மொத்த தொகையும் நிரப்பி அனுப்புமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப 17)

### அமெரிக்க...

நாடு ஒரு புறம் ஜனநாயக மரபு பற்றிய பெருமை பேசும் அதேவேளையில் இரண்டு மூர்க்கமான கிளர்ச்சிகளால் பாதிக்கப்பட்டுள்ளது.

ஜே. வி. பியின் கிளர்ச்சி

### வஞ்செயலால்...

இந்த நிதி அமெரிக்க உதவித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுவருகிறது.

ஆனால் ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பித்ததையடுத்து இந்த நிதியை வழங்க வேண்

வேலணைக் கோட்டத்தில்

## வசதிக்கட்டண ஆசிரியர் நியமிக்க அனுமதி கோரல்

வேலணைக் கோட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கவசதிக்கட்டணத்தில் ஆசிரியர்களை நியமிக்க தமக்கு அனுமதி வழங்குமாறு யாழ் கல்விப்பணிப்பாளரை வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரி திரு இ. புவேந்திரன் கேட்டுள்ளார்.

இப்பகுதியில் தற்சமயம் சகலதரத்திலும் சுமார் இருநூறு ஆசியர்களுக்கு வெற்றிடமுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

புதிதாக நியமிக்கப்பட்ட பல ஆசிரியர்களுக்கு கலாசாலை அனுமதி கிடைத்துள்ளதாலும் சுய விருப்பின்படி சுமார் முப்பத்தெட்டு ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளதாலும் இன்னும் சில ஆசிரியர்கள் வெளிநாடு செல்லும் நோக்குடன் பாடசாலைகளுக்கு தொடர்ந்து வராமல் இருப்பதாலும் இப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ப 17)

## வானொலி நாடகப் பயிற்சி

வானொலி நாடகக் கலைஞர்களுக்கான பயிற்சி வகுப்பு ஒன்று 'திரிசனம்' நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சி வகுப்பில் வானொலி நாடக எழுத்தாளர்கள், நடிகர்கள், தயா

சப்பட்டு தபால் விநியோக சேவை வழமைபோல் நடைபெறும்.

பிவைக்கப்படுமென்றும் தபால் வட்டாரங்கள் தெரிவித்தன. (33)

## 'சீநோர்' ஊழியர்களுக்கு சம்பள முற்பணம் கிடைத்தது

குருநகர் சீநோர் தொழிலாளர்களுக்கு நேற்று முன்தினம் சம்பள முற்பணமாக ஒவ்வொருவருக்கும் 3000 ரூபா வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காரைநகர் சீநோர் தொழிலாளர்களும் குருநகரிலுள்ள சீநோர் தொழிற்சாலையிலேயே கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கான கொடுப்பனவு கடந்த ஆனி மாதத்தில் இருந்து வழங்கப்படவில்லையென்றும் அவ்வப்போது சம்பள முற்பணமே வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப17)

---

## காலமானார்

## திருமதி அருணாசலம் இராசம்மா

கொடிகாமத்தைச் சேர்ந்த திருமதி அருணாசலம் இராசம்மா 11-03-1991 அன்று காலமானார். இவர் அருணாசலத்தின் அன்பு மனைவியும், திருநாவுக்கரசு (கொடிகாமம் அரசினர் வித்தியாலய அதிபரும் தெ. இ. ப. நோ. கூ. சங்கத் தலைவரும்) காலம் சென்ற திருஞானசம்பந்தர், இராமச்சந்திரன், சௌபாக்கியவதி, லீலாவதி (மத்திய வங்கி) ஆகியோரின் தாயாரும், திருநாவுக்கரசு, சிவபாக்கியவதி, திருஞானசம்பந்தர் இராசம்மா ஆகியோரின் மாமியாரும் இளைப்பாறிய புகையிரதச் சமிக்ஞைப் பொறுப்பாளர் கா. சின்னத்துரையின் சகோதரியும், அமரர் கந்தையா, கதிரவேலு கண்மணியின் ஒன்றுவிட்ட சகோதரியுமாவார். ஈமக்கிரியைகள் 12-03-1991 செவ்வாய்க்கிழமை பி. ப. 2 மணிக்கு வேவில் மயானத்தில் நடைபெறும். உற்றார் உறவினர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

C2060

---

ளர் சுந்தரலிங்கம் சகல அதிபர்களுக்கும் அறிவித்துள்ளனர்.

### அமெரிக்க...

நாடு ஒரு புறம் ஜனநாயக மரபு பற்றிய பெருமை பேசும் அதேவேளையில் இரண்டு மூர்க்கமான கிளர்ச்சிகளால் பாதிக்கப்பட்டுள்ளது.

ஜே. வி. பியின் கிளர்ச்சி நசுக்கப்பட்டு விட்டபோதிலும், விடுதலைப்புலிகளின் தனிநாட்டுக்கான போராட்டம் தொடர்கிறது. பாதுகாப்பு அமைச்சரே படுகொலை செய்யப்பட்டுவிட்டார்.

இப்பிரச்சினைக்கு இரத்தம் சிந்துவதன் மூலமல்லாமல் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணவேண்டும் என்று நாம் வலியுறுத்திவந்திருக்கிறோம்.

யுத்த நிறுத்தம் நீடிக்காதது துரதிர்ஷ்டவசமானது. ஆனால் பேச்சுவார்த்தைக்கு கதவு திறந்திருப்பதாக அரசு கூறிவிருப்பது நம்பிக்கைதருகிறது

ஜனநாயக வழியில் தெரிந்தெடுக்கப்பட்ட அரசுக்கு தன்னைப் பாதுகாக்கும் உரிமையுண்டு; ஆனால் சட்டத்தை அமுல் செய்வோர் அதற்குக் கீழ்ப்படியக் கடமைப்பட்டவர்கள்.

இதனை நாம் கடந்த ஒக்டோபரில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலும், ஐரோப்பிய சமூகக் கூட்டத்திலும் வலியுறுத்தியிருக்கிறோம்'' என்றும் அவர் தெரிவித்தார்.

---

நிரப்பி அனுப்புமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது, (ப 17)

### வன்செயலால்...

இந்த நிதி அமெரிக்க உதவித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுவருகிறது.

ஆனால் ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பித்ததையடுத்து இந்த நிதியை வழங்க வேண்டாம் என இந்த உதவித்திட்ட அதிகாரிகள் அரசுக்கு அறிவித்துள்ளனர்.

யுத்தம் ஆரம்பிக்க முன்னர் உயிரிழந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் நட்டஈடாக இதுவரை 61 மில்லியன் ரூபா வரை வழங்கப்பட்டுள்ளது.

இதில் 350 பேருக்கு இன்னும் நிதியுதவி செய்ய வேண்டியிருப்பதாகவும், இதனை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (66)

---

### அரசியல்...

ரான திரு மூக்குத்தடுபே வெளியிட்டுள்ளார். என்று கொழும்புப்பத்திரிகை ஒன்று செய்தி பிரசுரித்துள்ளது

அரசியல் காரணங்களுக்காக இந்தியாவில் தஞ்சமகோரி வருபவர்களுக்குப் புகலிடமளிப்பது எமது நீண்டகாலப் பாரம் பரியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (11)

---

இப்பகுதியில் தற்சமயம் சகதாரத்திலும் சுமார் இருநூறு ஆசிரியர்களுக்கு வெற்றிடமுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

புதிதாக நியமிக்கப்பட்ட பல ஆசிரியர்களுக்கு கலாசாலை அனுமதி கிடைத்துள்ளதாலும் சுய விருப்பின்படி சுமார் முப்பத்தெட்டு ஆசிரி

---

### இலங்கை...

குள் வரத் தொடங்கியுள்ளன.

இவர்களுக்கு அங்கே வேலைவாய்ப்பு அளிக்க ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் கூறப்படுகிறது.

---

### பாரளுமன்ற—

இக்கூட்டத்தைப் பகிஷ்கரிப்பது சபையின் நிரந்தர விதிகளை மீறும் செயலாகும் என அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஒரே கட்சி ஆட்சியையும், எதிர்க்கட்சி இல்லாத பாராளுமன்றத்தையும் அமைக்க அரசு முயல்கிறது எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சி, நவசமாஜக் கட்சி, ல. ச. ச. கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் கூட்டணி, மக்கள் ஐக்கிய முன்னணி என்பன இவ்வாறு தூண்டித்துள்ளன.

---

## வானொலி நாடகப் பயிற்சி

வானொலி நாடகக் கலைஞர்களுக்கான பயிற்சி வகுப்பு ஒன்று 'திரிசனம்' நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சி வகுப்பில் வானொலி நாடக எழுத்தாளர்கள், நடிகர்கள், தயாரிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளலாம்.

கலந்து கொள்ள ஆர்வமுள்ள அனைவரும் 15-ந்திகதி வெள்ளிக்கிழமை அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ 'திரிசனம்' அலுவலகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

---

### கொழும்பு...

இந்த உற்பத்திப் பொருள்கள் களஞ்சியங்களில் தேங்கிவிட்டதாகவும், இதனால் ஊழியர்களுக்குப் 'போனஸ்' போன்றவற்றை வழங்க முடியாதிருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ப1)

---

### காரைநகரில்...

தல் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சிறுமிகள் படுகாயமடைந்தனர். (74)

---

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு 'டச்சு வீதி, லக்ஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 12-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.